ISSN:2582-9599



# திருக்குறளில் நாடகக் கூறுகள்

**முனைவர் க. லதா**

**இணைப்பேராசிரியர் & துறைத்தலைவர்,**

**தமிழ் உயராய்வு மையம், பாத்திமா கல்லூரி, மதுரை.**

33

**திறவுச் சொற்கள்**

உலகப் பொதுமறை - இன்பத்து பால் - நாடகக் கூறுகள்-தனி மொழி - தனக்குள் உரையாடுதல்- அஃறிணைப் பொருட்களுடன் உரையாடுதல் - பிறரை முன்னிறுத்தி உரையாடுதல்- நாடகப்பாங்குடன் அமைதல்.

**ஆய்வுச் சுருக்கம்**

நாடகத்தமிழ் எளிய நடையில் அமைந்தது. திருக்குறளில் இன்பத்துப் பாடலில் இடம்பெறும் 25 அதிகாரங்களும் நாடகப்பாங்கில் அமைந்துள்ளன. நாடக முன்னிலைக் கூற்று வகைகளான பிறரை முன்னிறுத்திப் பேசுதல், நெஞ்சிற்குக் கூறுதல் , பிற அஃறிணைப் பொருட்களுடன் உரையாடல் என்ற வகைப்பாட்டில் குறட்பாக்கள் நாடகப் பாங்கில் அமைந்துள்ளன. நெஞ்சொடு புலத்தல் , புலவி நுணுக்கம், பொழுது கண்டு இரங்கல் முதலிய அதிகாரங்கள் முழுமையாகவே நாடகப்பாங்குடன் அமைந்துள்ளன.

**முன்னுரை**

முத்தமிழுள் ஒன்று நாடகத்தமிழ். இயல் மற்றும் இசைத் தமிழைக் காட்டிலும் எளிய பாமரருக்கு உரியதாக விளங்குவது. கலைகளுக்கெல்லாம் அரசாக, நாட்டின் நாகரிகக் கண்ணாடியாக, பாமரர்களின் பல்கலைக்கழகமாக விளங்குவது. உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அன்பையும் அறிவையும் தூய்மையையும் வெளிப்படுத்தி, மக்களைப் பண்படுத்தும் மகத்தான கலையாக விளங்குவது நாடகக் கலை. காலந்தோறும் நாடகங்கள் தேவைக்கேற்றவாறு தோன்றுகின்றன. அது போல இலக்கியங்களுக்குள் நாடகக் கூறுகளையும் காணமுடிகிறது. சங்கப் பாடல்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நாடகம் உண்டு. அது போல உலகப்பொதுமறையாம் திருக்குறளில் இன்பத்துப் பாலுள் ஒவ்வொரு அதிகாரமும் ஒரு நாடகமாகும். இன்பத்துப்பாலுள் இடம்பெறும் நாடகக் கூறுகளை இக்கட்டுரை ஆய்கிறது.

''நாடகம் என்பது உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் கண்ணாடி'' என்பார் அவ்வை தி.க. சண்முகம். (நாடகக் கலை, ப.15) தலைவன் மற்றும் தலைவியின் அகவாழ்வினைப் புலப்படுத்தும் தகையணங்குறுத்தல் முதலாக ஊடலுவகை ஈறாக இருபத்தைந்து அதிகாரங்களும் நாடகங்களே என்னுமளவிற்கு நாடகப்பாங்குடன் அமைந்துள்ளன. உரையாடல் வடிவில், தனிமொழியாக என நாடகத்துக்குரிய கூறுகளுடன் அமைந்து இன்பத்துப்பாலின் அதிகாரங்கள் சிறக்கின்றன. நாடகத்துக்கேயுரிய மெய்ப்பாட்டுணர்வுகளுடன் அமைந்திருப்பது சிறப்பு.

குறுகத் தரித்த குறள் ஒவ்வொன்றையும் உற்று நோக்கின் ஒரு பெரிய நாடகத்தை உள்ளடக்கி இருப்பதைக் காணலாம். பொதுவாக நாடகத்துக்கான அடிப்படைக் கூறு உரையாடல். அது தனித்து உரையாடுதலோ (நெஞ்சுக்குக் கூறுவது அல்லது தனிமொழி) எதிரில் இருப்போரிடம் உரையாடுவதோ ஆகலாம். சான்றாக,

**"மெல்லிய இனிய மேவரு தகுந**
**இவை மொழியாம் எனச் சொல்லினும் அவைநீ**
**மறத்தியோ வாழி என் நெஞ்சே" (குறுந். 306)**

என்ற சங்கப்பாடலில் தலைவி தன் நெஞ்சிடம் உரையாடுகிறாள். இப்பாடல் தனிமொழி அல்லது நெஞ்சொடு கிளத்தலாகிறது. அது போல,

**"இவர் யாரென்குவையாயின் இவரே**
**ஊருடன் இரவலர்க்கு அருளித் தேருடன்**
**முல்லைக்கு ஈந்த செல்லா நல்லிசைப்**
**படுமணி யானை பறம்பின் கோமான்**
**நெடுமாப் பாரிமகளிர்." (புறம். 200)**

என்ற பாடல், கபிலரிடம் பாரிமகளிரை இவர் யாரென வினவிய இருங்கோ வேண்மாளுக்குக் கபிலர் சொன்னது. இப்பாடலை எதிர் உரையாடல் என்று கொள்ளலாம். 'இடிக்கும் கேளிர்' (குறுந். 58) என்ற பாடல் தனக்கு அறிவுரை சொன்ன கேளிர்க்கு (உறவினர் பலருக்கு) மறுமொழி கூறும் உரையாடலாக அமைந்துள்ளது.

அதுபோல, திருக்குறளில் இன்பத்துப் பாலுள் தகையணங்குறுத்தல் அதிகாரத்தில் தலைவன்,

**"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**
**மாதர்கொல் மாலும்என் நெஞ்சு" (குறள். 1081)**

என்று தலைவியின் அழகு குறித்துத் தனக்குத் தானே கூறிக் கொள்கிறான். பொதுவாக நாடகங்களுள் நாடக மாந்தர்கள் தனியே நின்று பேசுகின்ற முறையைத் தனிமொழி என்பர். இதனைத் தொல்காப்பியம்,

**"நோயும் இன்பமும் இருவகை நிலையிற்**
**காம்ம் கண்ணிய மரபிடை தெரிய**
**எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய**
**உறுப்புடையது போல் உணர்வுடையது போல்**
**மறுத்துரைப்பது போல் நெஞ்சொட புணர்த்தும்"**
**(தொல்.பொருள்.2)**

என உரைக்கிறது. இவ்வாறே குறளிலும் தன்மனம் மயக்கியது, வருத்தும் தெய்வமோ, அழகிய மயிலோ குழையணிந்த பெண்ணோ என மயங்கித் தனிமொழி பேசுகிறான் தலைவன். நாடக உத்திகளுள் ஒன்றான தனிமொழி, இன்பத்துப்பாலில் தனக்குள் வினவும் விதமாக தனக்குத்தானே கூறிக் கொள்ளும் விதமாக வினாவும் விடையுமாக அமைந்து சிறக்கிறது.

**"ஒள் நுதற்கு ஓஓ உடைந்ததே ஞாட்பினுள்**
**நண்ணாரும் உட்கும் என் பீடு" (குறள். 1088)**

உறுப்புடையது போல உணர்வுடையது போல அஃறிணைப் பொருட்களை எண்ணிக் கொண்டு உரையாடும் போக்கு குறளில் பரவலாகக் காணப்படுகிறது.

**“நல்நீரை வாழி அனிச்சமே நின்னினும்**

**மெல்நீரள் யாம்வீழ் பவள்.” (குறள். 1111)**

என அனிச்சத்திடமும்,

**“மாதர்முகம்போல் ஒளிவிட வல்லையேல்**

**காதலை வாழி மதி” (குறள். 1118)**

எனவும்,

**“மலர் அன்ன கண்ணாள் முகம் ஒத்தியாயின்**

**பலர் காணத் தோன்றல் மதி.” (குறள். 1119)**

என்றும் மதியிடம் உரையாடுகிறான் தலைவன். தன் தலைவியின் மென்மைத்தன்மை மற்றும் ஒளிவிடும் முகம் ஆகியவற்றைப் பற்றிக் கூறும்போது இவ்வாறாகத் தலைவன் உரையாடுகிறான். அதுபோல,

**“மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள் கண்**

**பலர் காணும் பூஒக்கும் என்று” (குறள். 1112)**

எனத் தன் நெஞ்சுக்குக் கூறுகிறான் தலைவன்.

இக்குறட்பாக்களில் இடம்பெறும் உரையாடல் (மலர், மதி) தலைவியின் நலம்புனைந்து உரைக்கும் விதமாக அமைந்துள்ளது. நெஞ்சொடு கிளத்துகின்ற பாடலிலும் தலைவியின் கண்ணின் அழகைப் புனைந்து பாடும் முறையிலேயே அமைந்துள்ளது.

தனிமைத்துயரில் வாடும் தலைவி ஒருத்தியின் துயரக் குரலாகக் கீழ்க்காணும் குறள் ஒலிக்கிறது.

**“உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்**

**செறாஅய் வாழிய நெஞ்சு” (குறள். 1200)**

தனக்குத் துயரம் தலைவனைக் காண முயலுவதை விடவும், கடல் நீரைத் தூர்த்துவிடலாம் நெஞ்சமே எனத் தலைவி, தன் நெஞ்சோடு கூறுகிறாள். பிரிவுக் காலத்தில் தனித்திருந்து தலைவனை மிகுந்த வருத்தத்துடன் நினைக்கும் தலைவி, கடல் நீரையும் வற்றச் செய்து விடலாம், தலைவனை அடைய இயலாது என்று நெஞ்சொடு கிளத்துகிறாள்.

‘நினைந்தவர் புலம்பல்’ அதிகாரத்தில் தனிமொழியும் புலம்பலாக வெளிப்படுகிறது. தலைவன், தலைவி இருவரும் ஒருவரையொருவர் பிரிந்திருக்கும் நிலையில் தனித்தனியே புலம்பும் நிலை குறளில் புலப்படுகிறது.

**“யாமும் உளேம்கொல் அவர் நெஞ்சத்து எம் நெஞ்சத்து**

**ஓஒ உளரே அவர்.” (குறள். 1204)**

என் உள்ளத்தில் அவர் இருக்கிறார். ஆனால் அவர் மனத்தில் இருக்கின்றேனா? என்று தனக்குள் வினவிப் புலம்புகிறான் தலைவி. தனி மனிதர்களின் இத்தகு உணர்வினை ஆங்கிலத்தில் ‘Soliloquy’என அழைப்பர் (www.britanica.com) ஒரு நாடகத்தில் ஒரு பாத்திரம் மேடையில் தனியாக இருக்கும்போது அல்லது மற்ற நடிகர்கள் அமைதியாக இருக்கும்போது தனது எண்ணங்களை அல்லது

உணர்வுகளை உரக்க வெளிப்படுத்துகிறது.(www.britanica.com) ஷேக்ஸ்பியரின் "To be or not to be" மிகச் சிறந்த தனிமொழி என்பர். இது அவரது முக்கியமான நாடகமான ஹாம்லெட் (Hamlet) இல் இடம்பெறும் தனிமொழி உரையாடல் ஆகும். இது போன்ற தனிமொழி உரையாடல்கள் நாடகக் கதை மாந்தரின் உளவியலை வெளிப்படுத்தும் விதமாக அமைவன.

உளவியல் ரீதியாகத் தன் உணர்வுகளை வெளிப்படுத்தும் தலைவியின் கூற்று இதனை மெய்ப்பிக்கிறது. பொழுது கண்டு இரங்கும் தலைவி,

**"மாலையோ அல்லை மணந்தார் உயிர் உண்ணும்**
**வேலை நீ வாழி பொழுது."**

எனவும்,

**"புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள் போல்**
**வன்கண்ணதோ நின் துணை"**

என்ற குறட்பாக்களில் மாலைப் பொழுதினை விளித்துப் பேசுகிறாள். பொதுவாக, நாடக முன்னிலைக் கூற்றினை மூவகையாகப் பகுப்பர். ஒன்று, மற்றொருவரை முன்னிலைப்படுத்தி ஒருவரே பேசவது. இரண்டு, தம் நெஞ்சிற்குக் கூறிக் கொள்வது. மூன்று பிற அஃறிணைப் பொருள்களை முன்னிலைப்படுத்தி விளித்துக் கூறுவது. (இராம. பெரியகருப்பன், சங்க இலக்கிய ஒப்பீடு- இலக்கிய வகைகள், ப. 122)

தன் நிலையை, தன் துயரைத் தலைவி பலவாறாக அஃறிணைப் பொருள்களை விளித்துப் பேசுகிறாள். அது போல, 'நெஞ்சொடு புலத்தல்' அதிகாரம் முழுவதும் நெஞ்சை முன்னிறுத்தித் தன் துயரங்களைப் பகிர்கிறாள். அவ்வாறு பகிர்வதுடன் தன்னுடைய துயரங்கள் அனைத்திற்கும் நெஞ்சமே காரணகர்த்தா என அதனைச் சாடுகிறாள். பிணங்குகிறாள். இவ் அதிகாரம் தலைவன் தலைவி இருவர்க்கும் பொதுவான உணர்வுகளை வெளிப்படுத்துகிறது. நாடக முன்னிலைக் கூற்றனுள் முதலாவதாக இடம்பெறும் வகை, மற்றொருவரை முன்னிலைப்படுத்தி ஒருவரே பேசுவது. இம்முறையில் தான் திருக்குறளில் நெஞ்சொடு புலத்தல் அமைந்துள்ளது.

புலவி நுணுக்கம் என்ற அதிகாரம் எதிரிருப்போரை முன்னிறுத்தி உரையாடும் வகையில் இயற்றப்பட்ட அதிகாரம். இந்தப் பத்துக் குறட்பாக்களும் தலைவி தலைவனுடன் புலந்து ஊடும் நோக்கில், அவனுடன் சினம் கொள்ளும் நோக்கில் அமைந்துள்ளன. அதாவது அவன் தவறு செய்யாத போதும் அவனுடன் ஊடவேண்டும் என்ற காரணத்துக்காக, தன் காதல் மிகுதியால் அவன் செயல்களில் நுண்ணிய தவறு இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு அவனோடு ஊடுகிறாள் தலைவி. அவனோடு ஊடுவதற்காக அவள் கூறும் சில காரணங்கள்:

1. தலைவனைப் பொதுச் சொத்து போலக் கருதிப் பெண்கள் பார்த்தல்.
2. ஊடி இருக்கும் போது தும்முவது, தன் வாழ்த்தைப் பெறுவதற்காக எனல்.
3. பிற பெண்கள் காண்பதற்காகப் பூச்சூடியதாகக் கூறுதல்.
4. அவன் தும்மலை மறைக்க, அதற்கும் சினந்து அழுதல்
5. அவளை வியந்து நோக்கினாலும் யாருடனோ ஒப்பு நோக்குவதாக சினத்தல்

இவ்வாறு தலைவியின் செயல்பாடுகள் தன்னை முன்னிறுத்தும் வகையில் தலைவனுடைய அன்பைத் தான் மட்டுமே பெறவேண்டும் என்ற நோக்கில் புலவி நுணுக்கம் அதிகாரத்தில் அமைந்துள்ளன. இப்பகுதி தனிமொழியாக இன்றித் தன் முன்நிற்கும் தலைவனைச் சினந்து உரையாடும் விதமாக அமைந்துள்ளது.

**முடிவுரை**

இவ்வாறாக, உலகப்பொதுமறையின் இறுதிப்பகுதியான இன்பத்துப்பால் உரையாடல் கூறுகளைக் கொண்டு நாடகப் பாங்கில் அமைந்துள்ளது. முத்தமிழுள் முதன்மைத் தமிழ் என்று சொல்லத்தக்க வகையில் நாடகக் கூறுகளான, தனக்குள்ளே உரையாடல், பிறரை முன்னிறுத்தி உரையாடுதல், அஃறிணைப் பொருட்களைக் கேட்குந போலவும் கிளக்குந போலவும் எண்ணி உரையாடுதல் என்ற வகைக்குள் அமைந்துள்ளது. ஒவ்வொரு குறட்கருத்துக்கும் ஒரு நாடகம் இயற்றலாம் என்ற சிந்தனையைத் தோற்றுவிக்கும் வகையில் அமைந்துள்ளன இன்பத்துப்பால் குறட்பாக்கள்.